1973 டிசம்பர் 4]

நாடார் புதுக்குளத்திற்கு நீர் வழங்கல்.

* 611 வினா—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்**: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து மெயின் கால்வாய் மார்க்கமாக நாடார் புதுக்குளத்திற்கு தண்ணீர் விட வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு 7—3—1973 தேதியிட்டு மனு ஏதேனும் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) "நாடார் புதுக்குளம்" ஏரி, அக்கரையுள்ள சில உழவர்களினால் சுமார் 14 ஆண்டுகட்கு முன் அவர்களது பட்டா நிலங்களுக்குள்ளாகவே அமைத்துக் கொள்ளப்பட்ட ஒரு தனியார் ஏரியாகும். மணிமுத்தாறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் முறையாகச் சேர்க்கப்பட்ட 313 ஏரிகளில் இது அடங்கவில்லை. மணிமுத்தாறு தலைக்கால்வாய் மூலமாக இத்திட்டத்தின் கீழ் தற்போதுள்ள ஏரிகளுக்கே போதிய நீர் வழங்குவது மிகவும் கடினமாக இருப்பதால் கூடுதலான ஏரிகளுக்கு நீர் வழங்க முடியாது. எனவே, "நாடார் புதுக்குளம்" ஏரியை மணிமுத்தார் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்வதற்கில்லை.

பேசின்பிரிட்ஜ் மேம்பால வேலை.

* 612 வினா—**திரு. கா. வேழவேந்தன்**: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேசின்பிரிட்ஜ் மேம்பாலம் அமைப்பதில் இன்னும் முற்றுப் பெறாத வேலைகள் எப்பொழுது நிறைவுபெறும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தில் வேலைகளனைத்தும் முடிவடைந்துவிட்டன.

திரு. கா. வேழவேந்தன்: மிகப் பெரிய போக்குவரத்தைக் கொண்டிருக்கும் பேசின் பிரிட்ஜ் மேம்பாலத்தின் ஓரத்தில் கட்டப்பட வேண்டிய கைப்பிடிச்சுவர் கட்டப்படாமல் இருக்கிறது.

தென்மேற்கே புளியந்தோப்புப் பாதை இன்னும் திறந்துவிடப் படாமல் இருக்கிறது. விரைவில் அந்தப் பாதையைப் பயன் படுத்தும் முறையில் திறந்து வைக்கவும், கைப்பிடிச் சுவர் கட்டவும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : என்னிடத்தில் இருக்கும் தகவல்படி அந்த மேம்பாலம் 1972 ஏப்ரல் மாதம் திறந்துவிடப் பட்டதாகத் தகவல் இருக்கிறது. மேற்கொண்டு அங்கத்தினர் விவரம் தந்தால் விசாரிக்கப்படும்.

இரயில் வண்டிகளுக்கு டீஸல் இன்ஜின்கள்

*** 613 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தமிழகத்தில் ஓடும் முக்கிய இரயில் தடங்களில் டீஸல் இன்ஜின்கள் பொருத்தப்பட வேண்டுமென அண்மையில் நமது அரசு மத்திய அரசைக் கோரியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இன்றையதினம் 'ஏர் பொல்யூஷன்' பற்றி உலகத்தில் இருக்கும் எல்லா நாட்டுக் காரர்களும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் மக்கள் தொகை அதிகம். ரயில் போகின்ற ஓரங்களில் எல்லாம் வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ரயில் போகின்றபோது புகை ஏராளமாக கக்கப்பட்டு அங்கிருக்கக்கூடிய மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. சென்னை நகரத்தில் இருந்து தாம்பரம் வரையிலாவது டீசல் எஞ்சின் போட வேண்டு மென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு பரிந்துரைக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மின் இணைப்பில் இணைக்கப் பட்ட பாதை அது 'ஏர் பொல்யூஷன்' பற்றி மட்டுந்தான் அங்கத்தினர் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். டீசல் எண்ணெய் பற்றாக்குறையையும் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.